# தமிழ் கல்வி நிலையம் – மவுண்றூயிட்

## Tamil Study Centre - Mount Druitt


**Mobile: 0449 892 066**

**Email :mtdruitttsc@gmail.com** **Web : www.mtsc.org.au**


**செய்தி மடல் 2020 – 0 1** **01-02-2020**

"மனிதத்தில் ஒன்றுபட்டு சேர்ந்திருப்பீர் ;
இங்கு மழலைகள் தமிழ் கற்க செய்து வைப்பீர் ;
எமக்கு எனக் கொண்டு வந்தது ஏதுமில்லை ;
பெற்ற **தமிழை**யும் விட்டுவிட்டால் வாழ்க்கை இல்லை". எனவே எமது வாழ்க்கையை அர்த்தமுள்ளதாக்க எம் சிறார்களுக்கு தமிழைக் கற்பிக்கும் தலையாய கடமையை செவ்வனே செய்யும் மவுண்றூயிட் தமிழ் கல்வி நிலையம் தமிழை மட்டுமன்றி மாணவர்களை பண்பு, ஒழுக்கம், பணிவு, தன்னம்பிக்கை, ஆளுமை கொண்ட சிறந்த மாணவர்களாக உருவாக்கி வருகின்றது. இச்சிறப்பு பெற்ற எமது கல்வி நிலையத்தில் தமிழ் கற்றிட வந்திருக்கும் மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள், ஆசிரியர்கள் அனைவருக்கும் 2020ம் ஆண்டுக்கான செயற்குழு உறுப்பினர்களின் அன்பான வணக்கம். இச்செய்திமடல் மூலம் பின்வரும் விடயங்களை உங்கள் கவனத்திற்குச் சமர்ப்பிக்கின்றோம்.

1. ***2020ம் ஆண்டிற்கான செயற்குழு உறுப்பினர்களின் விபரங்கள் :***

| | |
|---|---|
| தலைவர் : | திரு.தே.கில்பேட் |
| உப தலைவர் : | திரு.சி.சிவசங்கர் |
| செயலாளர் : | திரு.ரா.சரவணகுமார் |
| உப செயலாளர் : | திரு.க.சுதாகரன் |
| பொருளாளர் : | திரு.பே.மகேஸ்வரமூர்த்தி |
| அதிபர் : | திரு.பா.முரளீதரன் |
| உப அதிபர் : | திரு.கொ.சதீஸ்கரன் |
| கல்விக்குழு : | திரு.தே.கில்பேட் |
| கல்விக்குழு : | திரு.பா.முரளீதரன் |
| கல்விக்குழு : | திரு.கொ.சதீஸ்கரன் |
| கல்விக்குழு : | திருமதி.ரா.குலவீரசிங்கம் |
| கல்விக்குழு : | திருமதி.நி.ஜனார்தனன் |
| கல்விக்குழு : | திரு.சி.சுதாகரன் |
| கல்விக்குழு : | திரு.கோ.முத்தரசு |
| கல்விக்குழு : | திரு.சி.சிவசங்கர் |
| கலாச்சாரக்குழு : | திரு.சு.சசிசுதன் |
| கலாச்சாரக்குழு : | திரு.பா.செந்தில்குமார் |
| கலாச்சாரக்குழு : | திரு.யோகராஜா |
| கலாச்சாரக்குழு : | திரு.சி.தேசிங்கு |
| கலாச்சாரக்குழு : | திரு.அ.ரோசாந்த ரூபன் |
| செயற்குழு உறுப்பினர் : | திரு.க.கௌரீஸ்வரன் |
| செயற்குழு உறுப்பினர் : | திரு.கு.முரளிதரன் |
| செயற்குழு உறுப்பினர் : | திரு.த.மயூரதன் |
| செயற்குழு உறுப்பினர் : | திரு.ஆ.பேரின்பமூர்த்தி |

2. ***2020ம் ஆண்டிற்கான ஆசிரியர்களின் விபரங்கள் :***

| | |
|---|---|
| திருமதி. ராஜேஸ்வரி குலவீரசிங்கம் : | 0449 892 066 |
| திருமதி. நிருபா ஜனார்தனன் : | 0469 135 014 |
| திருமதி. பாமரதி மகேஸ்வரமூர்த்தி : | 0413 622 746 |
| திருமதி. அனிதா சிவசங்கர் : | 0466 150 541 |
| திரு. சாமித்தம்பி கனகசிங்கம் : | 0451 489 664 |
| திரு. எல்விஸ் எமிலியானுஸ் : | 0424 314 740 |
| திருமதி. சாந்தி ஜெயதேவன்: | 0401 649 883 |
| திரு. செலஸ் குணரட்னம் : | 0430 039 602 |
| செல்வி. சிந்துஜா செல்வானந்தன் : | 0468 920 172 |
| திருமதி. தயாழினி முரளிதரன் : | 0434 284 538 |
| திருமதி. விஜயசுதா குகனேஸ்வரன் : | 0432 122 601 |
| திருமதி. கஜந்தி சதீஸ்கரன் : | 0469 077 745 |
| திரு. பரமேஸ்வரன் இரங்கநாதன் : | 0470 386 558 |
| திருமதி. செல்வராஜி இரங்கநாதன் : | 0469 427 599 |
| திருமதி. விஜயராணி சந்தோஷ் : | 0414 653 064 |
| திருமதி. சரஸ்வதி விஜயசங்கர் : | 0469 930 315 |
| திருமதி. ரெஜினா கெங்காதரன் : | 0402 164 717 |
| திருமதி. நிசாந்தி முரளிதரன் : | 0401 635 387 |

3. ***பொங்கல் திருவிழா (மாதிரிப் பொங்கல்)*** *– 08.02.2020 சனிக்கிழமை பி.ப. 1:30 – 2:00 மணிவரை*

தைப்பொங்கல் என்பது தமிழர்களால் சிறப்பாகக் கொண்டாடப்படும் ஒரு தனிப்பெரும் விழா. உழவர்கள் மழையின் உதவியால் ஆடி மாதம் முதல் உழைத்துச் சேர்த்த நெல்லை மார்கழியில் வீட்டிற்கு கொண்டு வந்து, தமது உழைப்பின் பயனை நுகரத் தொடங்கும் நாளே தைப்பொங்கல். இதனை எமது மவுண்றூயிட் தமிழ் கல்வி நிலையம் வரும் 08.02.2020 சனிக்கிழமை பி.ப. 1.30 மணி தொடக்கம் பி.ப. 2.00 மணிவரை மாணவர்களின் கலைநிகழ்ச்சிகளுடன் கொண்டாட இருக்கின்றது. பெற்றேர்கள், மாணவர்கள் அனைவரையும் பங்குபற்றி சிறப்பிக்கும் வண்ணம் மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.



4. *பாடசாலை நேரம் - பி.ப. 2:00 மணி முதல் பி.ப. 4:30 மணிவரை*

பிள்ளைகளை பாடசாலைக்கு பி.ப. 1.55 மணிக்கு அனுப்பிவைக்குமாறும், பாடசாலை முடிவடையும் போது தாமதமாகாமல் வந்து அழைத்துச் செல்லுமாறும் கேட்டுக்கொள்கின்றோம்.

| | |
|---|---|
| ஆரம்பமாகும் நேரம் : | பி.ப. 2.00 மணி |
| இடைவேளை : | பி.ப. 3.15ல் இருந்து பி.ப. 3.30 மணி வரை |
| முடிவடையும் நேரம் : | பி.ப. 4.30 மணி |

5. *பெற்றோர் கலந்துரையாடல் - 15.02.2020 சனிக்கிழமை பி.ப. 2.15 மணி*

எதிர்வரும் 15.02.2020 சனிக்கிழமை அன்று பி.ப. 2.15 மணிக்கு நடைபெற இருக்கும் பாடசாலை பற்றிய முக்கிய கலந்துரையாடலுக்கு சகல பெற்றோர்களையும் சமுகமளிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

6. *குடும்ப குதுகல தினம் (Family Fun Day) – 11.04.2020*




இந்த வருடம் பாடசாலையில் குடும்ப குதுகல தினம் எதிர்வரும் 11.04.2020 சனிக்கிழமை பி.ப. 12.30 மணிக்கு ஆரம்பமாகி பி.ப. 5 மணிக்கு நிறைவடையும். அன்றைய தினம் அனைவருக்கும் மதிய உணவு பி.ப. 12.30 தொடக்கம் பி.ப. 1.30 மணி வரை வழங்கப்படும். பாடசாலை மாணவர்கள் பங்குபற்றும் பல்வேறுபட்ட போட்டிகள் ஆசிரியர்கள் மற்றும் நிர்வாகக் குழு உறுபினர்கள் துணையுடன் பி.ப. 2 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. பெற்றேர்கள், மாணவர்கள் அனைவரையும் பங்குபற்றி சிறப்பிக்கும் வண்ணம் மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

7. *பாடசாலைக் கட்டணம் மற்றும் இதர கட்டணங்கள்*

உங்கள் பிள்ளைகளுக்கான இந்த வருடத்திற்கான பாடசாலை கட்டணத்தை தவணை ஒன்று முடியும் முன் செலுத்தி எமக்கு உதவுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம். அத்துடன் இதுவரை கடந்த வருடத்திற்கான உங்கள் பிள்ளைகளுக்கான பாடசாலைக் கட்டணம் மற்றும் இதர கட்டணங்களான அதிஷ்ட இலாப சீட்டிழுப்பு, கலைவிழா பங்களிப்பு கட்டணங்கள் செலுத்த தவறியவர்கள் விரைவாக அதனை செலுத்தி பாடசாலை திறம்பட நடைபெறுவதற்கு ஒத்துழைக்குமாறு அன்பாக கேட்டுக்கொள்கின்றோம்.

கடந்த வருடம் முதல் எமது பாடசாலை Creative Kids Registered Provider ஆக அங்கீகாரம் பெற்றுள்ளதால் நீங்கள் Creative Kids Voucher மூலமும் எமது பாடசாலைக் கட்டணத்தை செலுத்தலாம். எனவே பெற்றோர் கொடுப்பனவை நீங்கள் பணமாக அல்லது Creative Kids Voucher மூலம் செலுத்தலாம் என்பதை உங்களுக்கு அறியத்தர விரும்புகிறோம். மேலதிக விபரங்களுக்கு எமது கல்விநிலைய பொருளாளர் திரு.பே.மகேஸ்வரமூர்த்தி அவர்களை தொடர்பு கொள்ளவும். (தொலைபேசி இல : 0422 519 067)

8. *பேச்சுப் போட்டி — 30.05.2020 பி.ப. 1:30 மணி*

எமது பாடசாலையின் வருடாந்த பேச்சுப் போட்டி இரண்டாம் தவணை ஆரம்பத்தில் எதிர்வரும் 30.05.2020 அன்று மாலை 1:30 மணி முதல் பாடசாலை மண்டபத்தில் ஆரம்பமாகி நடைபெறும். முதலாம் தவணை முடிவில் அந்தந்த வகுப்பு ஆசிரியர்கள் பேச்சுப்போட்டிக்கான உரைத் தாள் பிரதிகளை மாணவர்களுக்கு வழங்குவார்கள். அனைத்து பாடசாலை மாணவர்களும் பேச்சுப்போட்டியில் பங்குபற்ற வேண்டும் என்பது எமது குறிக்கோள். எனவே பெற்றோர்கள் உங்கள் பிள்ளைகளுக்கு அவற்றை மனப்பாடம் செய்வதிலும் மற்றும் அதனை திறமையாக மேடையில் பேசுவதற்கும் உதவுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

9. *ஆண்டு மலருக்கான நிழற்படம் எடுத்தல் - 30.05.2020*



பேச்சுப்போட்டி நடைபெறும் தினமான எதிர்வரும் 30.05.2020 அன்று ஆண்டு மலருக்கான நிழற்படம் எடுக்க இருப்பதனால் மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் அனைவரும் எமது கலாச்சார உடையணிந்து வருகைதருமாறு மிகவும் பணிவன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

10. *ஒவ்வாமை (Allergy)*

பெற்றோர்கள் தமது பிள்ளைகளுக்கு ஏதாவது உணவுப்பண்டங்கள், குளிர்பானங்கள், பால், கடலை மற்றும் ஏனைய உணவுப்பொருட்களுக்கு ஒவ்வாமை இருக்குமானால் அதுபற்றி நிர்வாகக் குழுவிற்கும் உங்கள் பிள்ளைகளின் வகுப்பு ஆசிரியர்களுக்கும் அறியத்தருமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

11. ***மாணவர்களின் விபரங்கள்***

அனைத்து மாணவர்களின் கல்வி கற்கும் பிரதான பாடசாலை, வகுப்பு, பிறந்த திகதி, தொலைபேசி இலக்கம், முகவரி, மின் அஞ்சல் முகவரி மற்றும் WhatsApp செயலி விபரங்கள் அடங்கிய தரவுத்தளம் (Database) பாடசாலையால் பேணப்பட்டுக் கொண்டிருக்கின்றது. இதுவரை இவ்விபரங்களை பதிவு செய்யாத மாணவர்களது பெற்றோர்கள் உடனடியாக பாடசாலை நிர்வாகத்தை தொடர்பு கொண்டு பதிவு செய்யும்படி தங்களை பணிவுடன் கேட்டுக்கொள்கின்றோம் மற்றும் தங்களது பதிவில் ஏதேனும் திருத்தம் மேற்கொள்ள வேண்டியவர்களும் பாடசாலை நிர்வாகத்தை தொடர்பு கொண்டு திருத்தங்களை மேற்கொண்டு தங்களது சரியான தகவல்கள் பேணப்படுவதை உறுதிப்படுத்துமாறும் தங்களை பணிவுடன் கேட்டுக்கொள்கின்றோம். (மாணவர்களிடம் படிவம் கையளிக்கப்பட்டுள்ளதுஇ தயவுசெய்து அதனை உடனடியாக பூர்த்திசெய்து வகுப்பு ஆசிரியரிடம் ஒப்படைக்கவும்)

12. ***மாணவர் வரவு***

மாணவர்கள் பாடசாலைக்கு ஒழுங்காக வருகை தருவது அவர்களது கல்விக்கும், அமைச்சர் விருது பெறுவதற்கும், பாடசாலையின் வளர்ச்சிக்கும் மிகவும் முக்கியமானதாகும். அத்துடன் சமூகமொழிப் பாடசாலைகளிற்கு நியுசவுத்வேல்ஸ் கல்வித் திணைக்களத்தினால் வழங்கப்படும் மானியம் மாணவர்களின் வரவில் தங்கியுள்ளது. எனவே மாணவர்கள் தவறாமல் வருகைதரும்படி கேட்டுக்கொள்கின்றோம்.




13. ***முதலுதவி சேவை (First Aid)***

மாணவர்களுக்கு முதலுதவி தேவையேற்படின் எமது கல்விநிலைய முதலுதவி உத்தியோகத்தர்கள் திரு.பரமேஸ்வரன் இரங்கநாதன், திருமதி.விஜயராணி சந்தோஷ், திரு.சி.சிவசங்கர், திரு.கொ.சதீஸ்கரன் ஆகியோர்களுடன் தொடர்புகொள்ளவும்.

14. ***பெற்றோர்களின் உதவி***

வகுப்பு இடைவேளையின் போது மாணவர்களுக்கு குளிர்பானம், தேநீர் மற்றும் திண்பண்டங்கள் வழங்குவதற்கு பெற்றோர்கள் செயற்குழுவின் உப செயலாளர் திரு.க.சுதாகரன் அவர்களை தொடர்புகொண்டு உங்கள் பெயர்களை பதிவுசெய்யும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

வகுப்பு இடைவேளையின் போது விளையாட்டு மைதானத்தில் மாணவர்களை கண்காணிப்பதற்கு பெற்றோர்களின் உதவி மிகவும் அவசியமாக உள்ளது. எனவே இதற்கு உதவி செய்ய விரும்பும் பெற்றோர்கள் எமது உப அதிபர் திரு.கொ.சதீஸ்கரன் அவர்களை தொடர்புகொண்டு உங்கள் பெயர்களை பதிவுசெய்யும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

15. ***பாடசாலையில் மாணவர்களின் ஒழுங்கு முறைகள்***

- வகுப்பறையில் அமைதியாக இருந்து ஏனைய மாணவர்களை குழப்பாமல் ஆசிரியரின் சொல்லுக்கு கீழ்படிந்து நடந்து கொள்ள வேண்டும்.
- உங்கள் ஆசிரியர் வகுப்பறைக்குச் சென்றதன் பின்புதான் மாணவர்கள் வகுப்பறைக்கு செல்ல வேண்டும். அத்துடன் வகுப்பு முடிந்ததும் வகுப்பறையை பாடசாலை ஆரம்பிக்க முன்பு இருந்த ஒழுங்கு முறைக்கு ஏற்ப ஆசிரியருடன் சேர்ந்து ஒழுங்குபடுத்திய பின்பு தான் வெளியேற வேண்டும்.
- வகுப்பறை பொருட்களை சொந்த தேவைகளுக்கு பயன்படுத்தாமலும் வகுப்பறையில் உள்ள உடமைகளை சேதப்படுத்தாமலும் இருக்க வேண்டும்.
- வகுப்பறையில் மாணவர்கள் சக மாணவர்களின் பொருள்களை அனுமதி இல்லாமல் எடுத்தல் அல்லது ஒளித்து விளையாடுதல் போன்றவற்றை தவிர்த்தல் வேண்டும்.
- வகுப்பறையில் மாணவர்கள் தொலைபேசியையோ அல்லது ஏனைய இலத்திரனியல் உபகரணங்களையோ (IPad, Tablet, Nintendo, etc ) பாவிப்பதை கட்டாயமாக தவிர்க்க வேண்டும்.
- வகுப்பு இடைவேளையின் போது வழங்கப்படும் குளிர்பானம், தேநீர் மற்றும் சிற்றூண்டிகளை வரிசையில் வந்து பெற்றுக்கொள்வதுடன் அவற்றை வகுப்பறைக்கு கொண்டு செல்வதை தவிர்க்க வேண்டும்.
- இடைவேளை நிறைவடைந்து வகுப்பறை செல்லுமுன் உங்களிடம் எஞ்சியுள்ள உணவுப்பண்டங்களையும், குளிர்பானம் அருந்திய வெற்று குவளைகளையும் மற்றும் குப்பைகளையும் தவறாமல் குப்பை தொட்டியில் போடுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

16. ***சமாதான நீதவான் சேவை***

பெற்றோர்கள் உங்களுக்கான சமாதான நீதவான் சேவை தேவைப்படுமிடத்து சமாதான நீதவானும் எமது செயற்குழு தலைவருமான திரு.தே.கில்பேட் (தொலைபேசி இல : 0415 788 466) அவர்களை தொடர்புகொண்டு அந்த சேவையை பெற்றுக்கொள்ளமுடியும் என்பதை அறியத்தருகின்றோம்.

### 17. மாணவர்கள் தமிழைக் கற்பதில் பெற்றோர்களின் ஈடுபாடு

ஆசிரியர்கள் தமிழைக் கற்பித்தாலும் பெற்றோர்களே தங்கள் குழந்தைகளின் பிரதான கல்வியாளர்கள். எனவே பாடசாலைக்கும் வீட்டிற்கும் இடையிலான கூட்டு முயற்சியினாலேயே குழந்தையின் தமிழ் மொழி அறிவு வளரும் என்பதால் தமிழ் மொழி கற்பித்தல் பணியில் ஈடுபட பெற்றோர்கள் ஊக்குவிக்கப்படுகிறார்கள்.

அதாவது:

- தமிழில் குழந்தைகளுடன் முடிந்தவரை பேசுவது
- வீட்டுப்பாடம் மற்றும் பிற பாடசாலை நடவடிக்கைகள் மூலம் குழந்தைகளுக்கு வழிகாட்டுதல்
- குழந்தைகளின் முன்னேற்றம் குறித்து அதிபருடன் அல்லது வகுப்பு ஆசிரியருடன் கலந்துரையாடுவது
- பாடசாலை ஏற்பாடு செய்த சிறப்பு விழாக்களில் கலந்துகொள்வது
- பாடசாலை நடவடிக்கைகளில் பங்கேற்பது
- பாடசாலை நிர்வாகத்தில் இணைந்து பாடசாலையின் வளர்ச்சிக்கு உதவுவது

### 18. பாடசாலை வாகனத் தரிப்பிடம்

அதிகரித்த மாணவர்களின் எண்ணிக்கையினால் பெற்றோர்களுக்கான வாகனத்தரிப்பிடமாக எமது பாடசாலைக்கான வாகனத்தரிப்பிடத்தை பாடசாலை ஆரம்பிக்கும் நேரமான பி.ப. 2:00 மணி முதல் 2:10 மணிவரை பெற்றோர்கள் உள்நுழைவதற்காக திறக்கப்பட்டிருக்கும். உள்நுழைந்த வாகனங்கள் வெளியேறும் போது கதவுகள் தானாகவே திறக்கப்படும் என்பதை தங்களுக்கு அறியத்தருகின்றோம். எனவே பெற்றோர்கள் தங்களது வாகனங்களை பாடசாலை வாகனத்தரிப்பிடத்தில் நிறுத்திவைக்குமாறு தங்களை தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.




பெற்றோர்கள் தயவுசெய்து பாடசாலை சுற்றாடலில் உள்ள வீடுகளின் வாகனம் செல்லும் பாதைகளை (Driveway) மறித்து தமது வாகனங்களை நிறுத்தவோ/பாதைகளை பாவித்து தமது வாகனங்களைத் திருப்பவோ ("U" Turn) வேண்டாம் என்று மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம். இவை சட்டவிரோத செயல்கள் மட்டுமல்லாது பாடசாலை சுற்றாடலில் உள்ளவர்களுக்கு மிகுந்த அசௌகரியங்களை ஏற்படுத்துவதுடன் எமது மவுண்றூயிட் தமிழ்க் கல்வி நிலையத்திற்கு அவப்பெயர் ஏற்படுத்துவதாகவும் அமைகின்றது. ஆகையினால் தயவுசெய்து வாகனங்களை வீதி ஒழுங்கு முறைகளுக்கமைய பாதை ஓரத்தில் நிறுத்தி மவுண்றூயிட் தமிழ்க் கல்வி நிலையத்தின் செயற்பாடுகளிற்கு உதவி செய்யுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.




பாடசாலைச் சுற்றாடலில் வாகனங்களை நிறுத்தும்போது வீதி ஒழுங்கு முறைகளுக்கமைய நிறுத்தி வைப்பதோடு உங்கள் நடவடிக்கைகள் மற்றவர்களுக்கும் பாடசாலை அயலவர்களுக்கும் இடையூறு ஏற்படுத்தவில்லை என்பதை உறுதி செய்து கொள்ளுமாறும் தங்களை மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

### 19. நூலக சேவை (நூலகம்)

எமது மாணவர்களின் தமிழ் மொழித் திறனை விருத்திசெய்வதற்கு வாசிப்பு மிகவும் அவசியம் என்பதை உணர்ந்து மவுண்றூயிட் தமிழ்க் கல்வி நிலையத்தில் நூலகம் கடந்த ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு இந்த வருடம் முதல் செயற்படவுள்ளது. மாணவர்கள் நூல்களை வீட்டிற்கு எடுத்துச்சென்று வாசிப்பதற்காகக் கொடுக்கப்படவுள்ளது. பல்வேறு தமிழ்க் கதைப்புத்தகங்களும் இறுவெட்டுக்களும் மாணவர்களின் மேலதிக வாசிப்புக்காக வழங்கப்படும். இந்நூல்களை உரிய நேரத்தில் நல்ல நிலையில் மீளளிப்பது, பெற்றோர்களதும் மாணவர்களதும் கடமையாகும். புத்தகங்களில் சேதங்கள் ஏற்படுமிடத்து இது பற்றி உடனடியாக எமக்கு அறியத்தரவும். தயவுசெய்து உங்கள் குழந்தைகள் தமிழ்ப் புத்தகங்கள் வாசிப்பதை ஊக்கப்படுத்துங்கள். அவர்களுடன் கூட அமர்ந்து அவர்கள் தமிழ்ப் புத்தகங்கள் வாசிக்க உதவுங்கள். எமது பாடசாலையிற் கல்விகற்கும் காலத்தில் மாணவர்கள் அதிக தமிழ் நூல்களைக் கற்றுப் பயனடைவர் என்று எதிர்பார்க்கிறோம். எமது நிர்வாகக்குழு உறுப்பினர்களான திரு.சி.சுதாகரன், திரு.க.கௌரீஸ்வரன் இந்த நூலகத்திற்கு பொறுப்பாக இருப்பார்கள்.

### 20. பழைய மாணவர் செயலி WhatsApp - MTSC Alumni

எமது பாடசாலையில் கல்வி கற்று வெளியேறிய பழைய மாணவர்களை ஒருங்கிணைத்து அவர்களது திறமையையும் ஆளுமையையும் தமிழ் அறிவையும் வளந்து வரும் எமது மாணவர்களுக்கு அறிமுகப்படுத்துவதோடு அவர்களது தமிழ்ப் பற்றையும் எம் தமிழ் சமூதாயத்தோடு இணைந்த வாழ்வையும், அவர்களுக்கான வாய்ப்புக்களையும் ஏற்படுத்திக்கொடுப்பதற்காக ஒரு பழைய மாணவர்களுக்கான வாட்ஸ்அப் செயலி (MTSC Alumni WhatsApp group) ஆரம்பிக்கப்பட்டு அதிபரினால் பேணப்படவுள்ளது. எனவே எமது பழைய மாணவர்களை அதிபருடன் தொடர்புகொண்டு அந்த சேவையில் இணைந்துகொள்ளமுடியும் என்பதை அறியத்தருகின்றோம்.

## 21. இணையத் தளம் (Webpage)/ முகப் புத்தகம் facebook

எமது பாடசாலை இணையத் தளமான ***www.mtsc.org.au*** மற்றும் முகப்புத்தகம் தேவையான தகவல்களைக் கொண்டதாக தரவேற்றப்பட்டு புதுப்பொழிவுடன் அனைவரும் பயன்பெறும் வகையில் பாடசாலையினால் பேணப்பட்டுக் கொண்டிருக்கின்றது என்பதையும் உங்களுக்கு அறியத்தருகின்றோம். எமது பாடசாலை முகப்புத்தக முகவரி – https://www.facebook.com/groups/374995486577634/

## 22. வகுப்பு ரீதியான வாட்ஸ்அப் குரூப் (Class WhatsApp Group)

பெற்றோர் மற்றும் ஆசிரியர்கள் / குழு உறுப்பினர்களிடையேயான தகவல்தொடர்புகளை ஒவ்வொரு வகுப்பிற்கும் வாட்ஸ்அப் குழுக்கள் வழியாகவும் செய்திமடல் ஊடாகவும் பள்ளி கையேடு மூலம் வழக்கமான மின்னஞ்சல்கள் வாயிலாகவும் மற்றும் கலந்துரையாடல்கள் மூலமாகவும் பெற்றோர்களையும் மாணவர்களையும் தொடர்பு கொண’டு கருத்துக்கள் மற்றும் தகவல்கள் பரிமாற உள்ளோம். எனவே பெற்றோர்கள் இது தொடர்பாக தங்கள் கருத்துக்களை நிர்வாகத்திடம் தெரிவிக்கலாம்.

## 23. பாடசாலை விடுமுறை

எமது பாடசாலையின் தவணை ஒன்று எதிர்வரும் **11.04.2020** அன்றுடன் முடிவடைந்து தவணை இரண்டு வருகின்ற **02.05.2020** அன்று ஆரம்பமாகும் என்பதையும் உங்களுக்கு அறியத்தருகின்றோம்.

### *2020ம் ஆண்டு பாடசாலையின் முக்கிய திகதிகள்*

| | |
|---|---|
| முதலாம் தவணை ஆரம்பம் : | 01.02.2020 |
| **குடும்ப குதுகல தினம் :** | 11.04.2020 |
| முதலாம் தவணை முடிவு : | 11.04.2020 |
| இரண்டாம் தவணை ஆரம்பம் : | 02.05.2020 |
| **பேச்சுப்போட்டி :** | 30.05.2020 |
| **அரையாண்டுப் பரீட்சை :** | 20.06.2020 |
| இரண்டாம் தவணை முடிவு : | 04.07.2020 |
| மூன்றாம் தவணை ஆரம்பம் : | 25.07.2020 |
| **கலைவிழா :** | 26.09.2020 |
| மூன்றாம் தவணை முடிவு : | 26.09.2020 |
| நான்காம் தவணை ஆரம்பம் : | 17.10.2020 |
| **சரஸ்வதி பூஜை (வாணி விழா) :** | 17.10.2020 |
| **ஆண்டிறுதிப் பரீட்சை :** | 28.11.2020 |
| **ஒளி விழா , பரிசளிப்பு விழா மற்றும் புதிய செயற்குழு தெரிவு :** | 19.12.2020 |
| நான்காம் தவணை முடிவு : | 19.12.2020 |

நன்றி



மவுண்ட்றூயிட் தமிழ் பாடசாலை நிர்வாகம்.




“தமிழன் என்றொரு இனம் உண்டு

தனியே அவர்க்கொரு குணம் உண்டு

அமிர்தம் அவனது மொழியாகும்

அன்பே அவனது வழியாகும்” – **நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம்**